**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 278/2020 P.W.6 Additional Witnesses**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ராபர்ட் சிங் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day** **13.03.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது வெள்ளிச்சந்தை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். மேற்படி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்த ராமஜெயம் மற்றும் ஆய்வாளர் தங்கராஜ் ஆகியோர்களை நன்கு தெரியும். அவர்களின் கையொப்பம் மற்றும் கையெழுத்தை நன்கு அறிவேன். வழக்கின் தன்மை கருதி வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 14.06.2019 ம் தேதி 11.00 மணிக்கு தலைமை காவலர் நிலையப்பொறுப்பில் இருந்த போது ஆசாரிபள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் படி அங்குச் சென்று அங்கு சிகிட்சையிலிருந்த டைற்றஸ் தீஸ்மாஸ் என்பவர் கொடுத்த புகார் மனுவைப் பெற்று நிலையம் வந்து புகார் மனுவின் தன்மைப்படி காவல்நிலையக்குற்ற எண்.59/2019 சட்டப்பிரிவு 394 இ.த.ச 1860ன் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளார். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்துள்ளார்.

3. மேற்படி வழக்கு கோப்பை ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்ததை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 14.06.2019ம் தேதி பகல் 15.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 3 மற்றும் பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆகும்.** சாட்சிகளிடம் கையொப்பமும் பெற்றுள்ளார். பின்னர் 09.08.2019ம் தேதி 12.30 மணிக்கு குற்ற எண் 84/2019, சட்டப்பிரிவுகள் 294(பி), 392 இ.த.ச. 1860 ல் குற்றம் சுமத்தப்பட்ட நபரான சிவா என்பவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மணவாளக்குறிச்சி ஆய்வாளர் சாட்சிகள் முன்னிலையில் பதிவுச் செய்துள்ளார்.

4. பின்னர் 14.12.2019ம் தேதி காலை 07.45 மணிக்கு குற்றம் சுமத்தப்பட்ட நபரான கார்த்திக் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை கருங்கல் காவல்நிலைய ஆய்வாளர் குற்ற எண் 383/2019ன் படி விசாரணையின் போது கைது செய்து அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவுச் செய்துள்ளார். **மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 5, 6 ஆகவும், அத்தாட்சிகள் அ.சா.ஆ.7, 8 ஆகவும் குறியீடு செய்யபடுகிறது. அதற்கான படிவங்கள் 91 அ.சா.ஆ. 9,10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. சாட்சி 1க்கு சிகிட்சை அளித்த மருத்துவரை விசாரித்து காயச்சான்று பெற்றுள்ளார். **அந்த காயச்சான்று அ.சா.ஆ. 11 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** பட்டியல் சாட்சிகள் 1 முதல் 10 ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கைப்பதிவுச் செய்த தலைமை காவலரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்துள்ளார். இத்துடன் வழக்கின் விசாரணை முடித்து சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>குறுக்கு விசாரணை</u> :

சம்பவயிடம் செல்லாமலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் புகார் மனுவினை முறைப்படி விசாரணை செய்யாமலும் நடக்காத சம்பவத்தை நடந்ததாக சித்தரித்து இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்ப்பும் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.